
# DIOCESAN NEWS LETTER VELLORE

Vol : 19 | September 2022 | No : 09 (For Private Circulation Only)






விளிம்புநிலை கிறிஸ்தவ மக்களின் உரிமைக்காக வீதியில் இறங்கி போராடிய களப்போராளி! எம் மறைமாவட்ட பரிபாலகர் பெருந்தகை!!
பேரருட்தந்தை இ. ஜான் ராபர்ட் அவர்கள்!!!






இறையரசு மலர

REGNUM CHRISTI

"அவர் உங்களுக்குச்
சொல்வதெல்லாம் செய்யுங்கள் யோவான்" 2:5

# DIOCESAN NEWS LETTER
## VELLORE

**(FOR PRIVATE CIRCULATION ONLY)**

**Vol. 18 SEPTEMBER - 2022 No. 09**

**Dear Fathers, Brothers and Sisters**

In the month of September we celebrate the feast of the Nativity of Blessed Virgin Mary on Sep.8, The Exaltation of the Holy Cross on 14, The Dedication of Vellore Cathedral Church on 15 which is also the feast of Our Lady of Sorrows, The feast of St. Mathew the Evangelist on 21, and the feast of the Holy Archangels on 29 respectively.

September 8$^{th}$ is the feast of the Nativity of Blessed Virgin Mary who is also known as Our Lady of Good Health globally and Our Lady of Velankanni nationally. The question is why do we celebrate the Nativity of the Blessed Virgin Mary? Usually it is the custom of the church **to celebrate the feast day of a saint on the date of their death as this is truly their "die natalis", the day remembered as their birth into everlasting happiness**. Whereas in the Church there are 3 important people whose birth day is celebrated namely, the birth of Jesus on Dec. 25, the birth of Blessed Virgin Mary on Sep 8, and the birth of John the Baptist on June 25. Why only for these 3 people? It's because these three important figures in the Gospel is directly involved in God's Salvific plan.

The Feast of the Nativity of Blessed Virgin Mary reminds us that everyone's birth is a gift from God and that it should bring happiness, joy and hope to the people. But Mary's birth is a gift of God to the humanity through whom God's plan of Salvation was fulfilled. Many devotees are going to Veilankanni from many of our parishes as Pilgrimage that is one of their faith exposures and witness. Wish them all God's abundant blessings. There are couple of parishes in our diocese who have *Arockia Madha* as their patroness and celebrate it as their parochial feast. And some of our priests are having this feast as their name feast. I wish them all a very **HAPPY FEAST**.

On 15 we commemorate the **Dedication of our Cathedral Church**. *A cathedral is a church that's **run by a bishop**; it's the principal church within a diocese, the area of land over which a bishop has jurisdiction. It's named for the **cathedra (Latin – Seat)**, the special chair in which a bishop sits.*

At this juncture I would like to ask all our priests, religious and people to pray to God and Our Lady so that we may get a shepherd soon to our diocese since the Seat is vacant for the past two and a half years.

Thiruvannamalai parish has solemnly concluded their **Golden Jubilee** celebrations of its erection with two bishops. I do appreciate the parish priests,Rev. Fr. K.S. Gnana Jyothi, VF & Rev Fr. B. Arokia Nirmal Raj religious, parish council, leaders of different groups, volunteers and the parishioners and wish them all God's choicest blessings.

On August 13 the Black Day was observed in the diocesan level at Chetpet parish. It was very meaningful, successful and motivational

to our people for this cause also our open agitation to the government against the injustice done to our Dalit people demanding the government to repeal the Presidential Order of August 10, 1950 not granting SC status for Dalit Christians. I take this opportunity to thank and appreciate Fr. Lawrence, secretary to SC/ST commission and his team Fr. P. Gnanasekar, Fr. Leo, Fr. Satish, Fr. Anand and the assistant parish priests. Special thanks to Rev. Fr. Victor Inbaraj, the parish priest for all his encouragements and support for the success of this event.

As we celebrate the Feast of the Exaltation of the Holy Cross on 14 I wish all the sisters of Holy Cross congregation especially those who are serving our diocese at Sathuvachary for the education of our children. Happy Feast and God's choicest blessings to them. Also I would like to wish all our priests and religious who celebrate their birth day, feast day and ordination day in this month.

This year is the centenary year (1922-2022) of the presence of the Salesian Sisters of Don Bosco in Vellore diocese that they opened three convents at that time such as St. Mary's, Vellore, Polur and Arni consequently. To celebrate this historical event Mother General Very Rev. Sr. Chiara Cazzuola FMA is coming with her team to India especially to our diocese on 2 Sep. 2022. On that day I will be celebrating thanks giving mass at St. Mary's convent in the morning and in the evening she pays a visit to our Cathedral Church and comes to bishop's house for tea. The following day on 3 Sep. there will be centenary mass at Auxiliam College at 11:00 am and centennial celebrations at 4:30 pm. The Salesian sisters are cordially inviting all our priests and religious for this historical event. I, in the name of Vellore diocesan priests, religious and people extend our appreciation and congratulation for their wonderful service to the

diocese for the past 100 years in the fields of pastoral, educational, health and social. May the good Lord continue to be with them and bless our diocese through their continued service to our people and Mary Help of Christians be their source of inspiration in their continued ministry.

God bless.

**Very Rev. Msgr. I. John Robert,**
Diocesan Administrator

## ADMINISTRATOR'S PROGRAM

| | | | |
|---|---|---|---|
| 01 | Thu | | Novena Mass, Besant Nagar, Chennai |
| 02 | Fri | M | Holy Mass, St. Mary's, Vellore |
| | | E | Meeting with Salesian Mother General |
| 03 | Sat | M | Centenary Holy Mass, Auxilium College, Gandhinagar |
| | | E | Centennial Celebrations, Auxilium School, Gandhi Nagar |
| 04 | Sun | | Blessing of Flag Post & Flag hoisting, Old Town |
| 05 | Mon | M | Feast Mass, MC Convent, Vellore |
| | | E | Wedding, T.V. Malai |
| 07 | Wed | | Wedding, C. Namiyandal |
| 08 | Thu | M | Feast Mass, Ranipet |
| | | E | Feast Mass, Railway Colony, Arakonam |
| 11 | Sun | M | Confirmation, Bahayam |
| | | E | Holy Mass, Teachers' Retreat, Vellore |
| 14 | Wed | | Feast Mass, Holy Cross Convent, Sathuvachery |
| 15 | Thu | | Wedding Jubilee Mass, Anthoniyar Nagar |
| 18 | Sun | | Feast Mass, Cheyyar |

| | | | |
|---|---|---|---|
| 24 | Sat | | Episcopal Silver Jubilee, Most. Rev. Dr. M. Devadass Ambrose, Bishop of Thanjavur |
| 25 | Sun | M | Holy Mass, Teachers' Retreat, Vellore |
| | | E | Blessing of the New Church, Random Korattur |
| 27 | Tue | | Flag Hoisting & Blessing of the New Eucharistic Chapel, Gengapattu |
| 28 | Wed | | Recollection, Bishop's House, Vellore |
| 29 | Thu | | Feast Mass, Random Korattur |

**Very Rev. Msgr. I. John Robert,**
Diocesan Administrator

## PRIESTS' TRANSFER LIST - JULY, 2022

**Parishes & Parish Priests**

| | | |
|---|---|---|
| 1.Soganur | - | Rev. Fr. A. Bernard Velanganni |
| 2.Thanipadi | - | Rev. Fr. B. Arokia Nirmal Raj |

**Parishes & Asst. Parish Priests**

| | | |
|---|---|---|
| 1.Chetpet | - | Rev. Fr. P. Vino Alphons Xavier |
| 2.Tiruvannamalai | - | Rev. Fr. F. Felix Kamal |
| 3.Cathedral | - | Rev. Fr. A. Chinnasamy |
| 4.Vettavalam | - | Rev. Fr. Velankanni |
| 5.Viruduvilanginan | - | Rev. Fr. Lawrance Pius |

**Very Rev. Msgr. I. John Robert,**
Diocesan Administrator

**Monthly Recollection**

Monthly Recollection for the month of September will be on **Wednesday 28th September, 2022 in the Bishop's House**. You are requested to take part in the monthly recollection without fail. The absentees are asked to get prior permission from me.

**The Time Table as Follows:**

| | | |
|---|---|---|
| 09.30 | - | Arrival |
| 10.00 | - | Talk – I |
| 11.00 | - | Break |
| 11.30 | - | Talk – II |
| 12.30 | - | Lunch |
| 02.30 – 03.30 | - | Adoration, Confession and Benediction |
| 03.30 | - | Announcements |
| 04.00 | - | Tea |



**Very Rev. Msgr. I. John Robert,**
Diocesan Administrator

**கத்தோலிக்க மேய்ப்புப்பணி நிலையம், வேலூர்**
ஞாயிறு மறைக்கல்வி கருத்தரங்கு

**ஞாயிறு மறைக்கல்வி கருத்தரங்கு** : திருப்பத்தூர் பங்கு புனித சகாயமாதா ஆலயத்தில் 09.08.2022, அன்று காலை 10 மணி முதல் மதியம் 2 மணிவரை நடைபெற்றது. தலைமையேற்று வழிநடத்தியவர் அருட்பணி கிளமென்ட் அந்தோணி V.F., ச.ச. அவர்கள். கருத்தாளர் அருட்பணி கிருபா ச.ச. இயக்குனர், தீபகம், சென்னை. ஞாயிறு மறைக்கல்வி ஆசிரியர்களின் பண்புகள் பற்றியும் ஞாயிறு மறைக்கல்வி பிள்ளைகளுக்கு எவ்வாறு இயேசுவை அனுபவித்து பிறருக்கு அறிவித்தல் பற்றியும் விளக்கம் அளித்தார். பின்னர் அருள்முனைவர். L. ரமேஷ் அந்தோணி அவர்கள் நம் மறைமாவட்டத்தில் நிலவும் மறைக்கல்வியின் நிலை, ஆயர்மாமன்ற கருத்து கேட்டலின் வெளிப்பாடு

எல்லா பங்குகளிலும் ஞாயிறு மறைக்கல்வியை ஊக்கப்படுத்தல் மற்றும் புதுப்பித்தல் பற்றியும் விளக்கம் கொடுத்தார்.

பாஸ்டர் ரவிந்திரர் அவர்கள் பொம்மலாட்டம் வழியாக ஞாயிறு மறைக்கல்வியை எவ்வாறு கற்பித்தல் பற்றியும் சிறப்பாக அவற்றைக் கற்றுக்கொடுத்து முறையான பயிற்சியும் அளித்தார். அதன்பின் மறைக்கல்வி ஆசிரியர்கள் 4 குழுக்களாக பிரிக்கப்பட்டு பொம்மலாட்டம் நடித்துக்காட்டப்பட்டது. இதில் திருப்பத்தூர் மறைவட்டத்திலுள்ள எல்லா பங்குகளிலிருந்து 42 ஞாயிறு மறைக்கல்வி ஆசிரியர்கள் கலந்துக் கொண்டார்கள். இந்த கருத்தரங்கில் எல்லா பங்குதந்தையர்களும் கலந்துக் கொண்டது மிக முக்கியத்துவமாக அமைகின்றது. இறுதியாக மேய்ப்புப்பணி இயக்குநர் தந்தை அவர்கள் இக்கருத்தரங்கை ஏற்பாடு செய்த அருட்பணி கிளமென்ட் அந்தோணி V.F., அருட்பணி சேகர், கருத்தாளர், அருட்பணி கிருபா ச.ச, பாஸ்டர் ரவேந்திரர் சென்னை. ஆகிய அனைவருக்கும் நன்றி தெரிவித்தார். எல்லா பங்குகளிலிருந்து வந்திருந்த அனைத்து பங்கு தந்தையர்களையும், கலந்துக் கொண்ட ஞாயிறு மறைக்கல்வி ஆசிரியர்கள் அனைவரையும் மறைக்கல்வி பணியை சிறப்பாக செய்ய உற்சாகப்படுத்தினார். மதிய உணவுடன் ஞாயிறு மறைக்கல்வி கருத்தரங்கு இனிதே நிறைவுபெற்றது.

தங்களின் மேலான ஒத்துழைப்புக்கு நன்றி!

இறைபணியில் அன்புடன்
**அருள்முனைவர். L. ரமேஷ் அந்தோணி**
இயக்குநர், மேய்ப்புப்பணி நிலையம், வேலூர்

## VELLORE TIRUVANNAMALAI SOCIAL SERVICE SOCIETY

**26 முதல் 28.07.2022 :** சென்னை காரிதாஸ் இந்தியா நிறுவனத்தின் "புற்றுநோய் பராமரிப்புக்காக இயங்கும் எழுவோம் இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் சிறப்புக் கூட்டம்" நடைப்பெற்றது. இக்கூட்டத்தில் திரு. இராசு லூயிஸ், TVMSSS திட்ட அலுவலர் திரு. இன்ப சேகர் ஆகியோர் கலந்துக்கொண்டு, வேலூர் மறைமாவட்டத்தின் செயல்படும் புற்றுநோய் பராமரிப்பு பற்றிய அறிக்கையை சமர்பித்தனர். சென்னை அடையாறு புற்றுநோய் மையம் மற்றும் பழவேற்காடு சுயஉதவிக்குழுக்கள் மூலம் செயல்படும் மாதிரி கிராமத்தை பற்றிய செய்திகளை கள ஆய்விலும் கலந்துக்கொண்டனர்.

**கோல்பிங் சங்கங்களை பார்வையிடல் :**

கோல்பிங் ஒருங்கிணைப்பாளர். திரு. யேசுபிரபு, கண்காணிப்பு குழு உறுப்பினர்கள் திரு. சவரிநாதன், திருமதி. செலின் ஆகியோர் கீழ்காணும் இடங்களை பார்வையிட்டு குழுக்களை ஆய்வு செய்தனர்.

- 10.08.2022 - செல்லாங்குப்பம், கெங்கப்பட்டு, ஆவூர், ஜமீன்கூடலூர்
- 18.08.2022 - உதயேந்திரம்

**15.08.2022** : அன்று VSSS & TVMSSS ஆகிய சமூக சேவை சங்கங்களின் அங்கீகாரத்தில் செயல்படும் மகளிர், கோல்பிங், விவசாய சங்க பிரதிநிதிகள் 75-ம் ஆண்டு சுதந்திர விழாவிலும் அன்று நடைபெற்ற கிராமசபா சிறப்பு கூட்டத்தில் பங்கேற்று தங்கள் கிராமங்களின் தேவைகளை மனுக்களாக தயாரித்து அளித்தனர்.

**22.08.2022** : அன்று சென்னை காரிதாஸ் இந்தியா நிறுவனத்தின் "புற்றுநோய் பராமரிப்புக்காக இயங்கும் எழுவோம் இயக்கத்தின் தன்னார்வ தொண்டர்களின் சிறப்புக் கூட்டம்" வேலூர் ஆயர் இல்லத்தில் உள்ள வேலூர் சமூக சேவை சங்கத்தில் நடைப்பெற்றது. இக்கூட்டத்தில் சென்னை, செங்கல்பட்டு, பாண்டிச்சேரி, விக்கிரவாண்டி, வேலூர், திருவண்ணாமலை ஆகிய மறைமாவட்டங்களிலுள்ள தன்னார்வ தொண்டர்கள் கலந்துக்கொண்டனர். திட்ட மேலாளர் திரு. பேட்ரிக் அவர்கள் அனைத்து தன்னார்வ தொண்டர்களையும், இக்கூட்டத்தை வழிநடத்தும் சென்னை மண்டல காரிதாஸ் இந்தியா திட்ட அலுவலர் டாக்டர் ஜான் ஆரோக்கியராஜ் அவர்களையும் வரவேற்றார். பேரருட்திரு. S. ஜேம்ஸ், VSSS & TVMSSS இயக்குநர் அவர்கள், பங்கேற்ற அனைவரையும் வாழ்த்தி அருளாசீர் வழங்கினார். இக்கூட்டத்தில் தன்னார்வ தொண்டர்களின் எதிர்காலப் பணிகளையும், புற்றுநோய் நோயாளிகளிடம் அணுகுமுறை பற்றியும் விவாதிக்கப்பட்டது, பிறகு இதன் குழு ஆய்வும் நடைப்பெற்றது. VSSS கணக்காளர் திரு. இராசு லூயிஸ் அவர்கள் நன்றி கூறினார். அனைவருக்கும் உணவு பரிமாறப்பட்டது. இதில் 42 தன்னார்வ தொண்டர்கள் கலந்துக்கொண்டனர்.

**செய்தி தொகுப்பு**
**திரு. A.பேட்ரிக் &**
**திரு. T.இன்பசேகர்**
**VSSS & TVMSSS திட்டமேலாளர்கள்**

**பேரருட்திரு. S.ஜேம்ஸ், MSW**
**இயக்குநர், VSSS & TVMSSS**
**ஆயர் இல்லம், வேலூர்**

## புனித வின்சென்ட் தே பவுல்

**வேலூர் மத்திய சபை செய்திகள்**

**31.07.2022 ஞாயிறு** : தமிழக மண்டல சபை சார்பில் நடைபெற்ற இளைஞர் & மகளிருக்கான தியான கருத்தரங்கு "எம்மாவுஸ்" தியான மையத்தில் நடைபெற்றது. இதில் வேலூர் மத்திய சபைக்கு உட்பட்ட கிளைச்சபைகளிலிருந்து சுமார் 18 நபர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர். வேலூர் வட்டார சபைத் தலைவி திருமதி. கிளாரா மெட்டில்டா, வேலூர் மத்தியசபை துணைத் தலைவர் வேட்டவலம் S. பெரியநாயகம் இத்தியான கருத்தரங்கில் கலந்து கொண்டு சிறப்பித்தனர். மகளிர் சார்பாக திருமதி ஜெனிட்டா "நான் தலைவரானால்" என்ற தலைப்பிலும், வின்செந்தியப் பணியில் இளைஞர்கள் என்ற தலைப்பில் இளைஞர் பிரதிநிதி சகோ. வின்சென்ட் அவர்களும் தங்கள் கருத்துகளை பகிர்ந்து கொண்டனர்.

**31.07.2022 ஞாயிறு** : வேலூர் மத்தியசபைத் தலைவர் சகோ. ம. சார்லஸ் ஆரோக்கியராஜ், பாகாயம் கிளைச்சபையை சந்தித்தார். அப்பொழுது பங்கின் பீட உதவி சிறுவனுக்கு ஏற்பட்ட விபத்தில் கால்முறிவுக்கு மருத்துவ உதவி கோரினார்கள். அதற்கான வழிமுறைகளை கேட்டு சம்மந்தப்பட்டவரின் கடிதம், மருத்துவ ஆய்வு அறிக்கை, கிளைச்சபை, வட்டாரசபை தலைவர்களின் பரிந்துரையோடு பங்கு தந்தையின் ஒப்புதலும் பெற்று அனுப்பும்படி அறிவுறுத்தப்பட்டது. அதற்கான வழிகளை கூறிய பின்னர், முடிவு செபத்துடன் கூட்டம் இனிதே முடிவுற்றது.

**15.08.2022 திங்கள்கிழமை** : 75-வது சுதந்திர தினவிழா அன்று வேலூர் மத்தியசபையின் உள்நாட்டு சுவிகார கிளைச்சபை ஓல்டுடவுன் புனித வேளாங்கண்ணி மாதா மகளிர் கிளைச்சபையில் தேவையில் உள்ள 5 நபர்களுக்கு புடவைகள் வேலூர் மத்தியசபைத் தலைவர் சகோ. ம. சார்லஸ் ஆரோக்கியராஜ் அவர்களால் வழங்கப்பட்டது. கிளைச்சபை உறுப்பினர் சகோ. அருமைநாயகி பிரபு, ஆரோக்கியமேரி ஆகியோர் உடன் இருந்தனர்.

**போளூர் திருஇருதய கிளைச்சபை** : போளூர் திரு இருதய கிளைச்சபையின் சார்பாக 75-வது சுதந்திர தினவிழா அன்று போளூர் பங்குத்தந்தையின் உதவியோடு சலேசிய உடன் உழைப்பாளர்களோடு

இணைந்து ஏழை எளிய தேவையில் உள்ளவர்கள் சுமார் 100 பேருக்கு புத்தாடைகள் மற்றும் சுகாதார பொருட்களும் வழங்கி கொண்டாடப்பட்டது. மத்திய சபை மூத்த சகோ. அ. தோமினிக் மற்றும் கிளைச்சபை பொறுப்பாளர்கள் உடன் இருந்தனர்.

| | |
|---|---|
| பேரருள்திரு. **ஜெ. ஜெயபிரகாசம்** | **ம. சார்லஸ் ஆரோக்கியராஜ்** |
| இயக்குநர், பக்த சபைகள் | தலைவர், வேலூர் மத்திய சபை |

## மரியாயின் சேனை

**31.07.2022** ஞாயிற்றுக்கிழமை மாலை 05.00 மணியளவில் போளூர் கியூரியா பேரருட்பணி செபாஸ்டின் அடிகளாரின் பெரும் முயற்சியாலும், கொமித்சிய அலுவலர்களின் விடாமுயற்சியாலும், பக்த சபை இயக்குநர் தந்தை ஜெயபிரகாசம் அடிகளாரின் தலைமையில் 15 சேனையார் கொண்ட கியூரியா புதுப்பிக்கப்பட்டது. அன்று அனைவரும் மெழுகு திரிகள் ஏந்தி அன்னைக்கு வாக்குறுதி எடுத்துக் கொண்டபின், புதிய பொறுப்பாளர்கள் தேர்வு செய்யப்பட்டு, கொமித்சிய தலைமையில் மாதிரி கூட்டம் நடத்தி பொறுப்புகளை ஏற்றனர். தொடர்ந்து, தொய்வின்றி கூட்டம் நடத்த பங்குத்தந்தை அவர்களை ஊக்குவித்து பக்தசபை இயக்குநர் சேனையின் கடமைகளை வலியுறுத்தி உண்மையுள்ள பணியாளர்களாக விளங்க அறிவுறுத்தினார். மாலை 7.00 மணியளவில் கூட்டம் இனிதே நிறைவுற்றது.

**07.08.2022** ஞாயிற்றுக்கிழமை காலை 10.30 மணி முதல் 01.30 மணிவரை காட்பாடி கியூரியா தூய இதய ஆண்டவர் ஆலயத்தில் மரியாயின் சேனை ஆன்ம இயக்குநர் பேரருட்திரு மார்டின் அடிகளார் தலைமையிலும், பக்தசபை இயக்குநர் பேரருட்பணி ஜெயபிரகாசம் அடிகளார் முன்னிலையிலும், சேனையார் தங்களின் ஆண்டு இறுதி விழாவின் 'ஆச்சேஸ் விழா' கொண்டாடினர். இதில் காட்பாடி, நேரடி பிரிசிடியங்கள், குடியாத்தம் பங்கு கிறிஸ்டியான்பேட்டை, காந்திநகர், சேவூர் ஆகிய கிளை பங்குகளிலிருந்து மொத்தம் 55 சேனையார் பங்கேற்று திருப்பலி கண்டு, தங்கள் வாக்குறுதிகளை புதுப்பித்தனர். ஜெயபிரகாசம் அடிகளார் வாழ்த்துரையில் சேனையினரின் கடமைகள், பொறுப்புகள் பற்றி கூறி கடைப்பிடிக்க வலியுறுத்தினார். ஆன்ம இயக்குநர் மார்டின் அடிகள் அன்னையின் மாண்பு அவர் திருஅவையில் பெற்றிருக்கும் பொறுப்புகள் பற்றி விளக்கி, பக்தசபை திருஅவைக்கே

தான் என்று கூறி சேனையார் தாழ்ச்சியோடு சேனை பணியாற்ற கேட்டுக் கொண்டார். கொமித்சிய தலைவி ரத்னா மேரி சேனையின் விழாக்கள், அதன் முக்கியத்துவம் பற்றி விளக்கினார். அருட்பணி மரிய அந்தோணி திருப்பலியை நிறைவேற்றிய பின்பு வருகை தந்த அனைவருக்கும் மதிய உணவு வழங்கப்பட்டது.

**13.08.2022** சனிக்கிழமை காலை 11 மணியளவில் வேட்டவலம் கியூரியா தன் கிளை பங்குகள் 10 இணைந்து சேனையார் ஆச்சேஸ் விழா கொண்டாடினர். இதில் பேரருட்பணி ஆரோக்கியசாமி தலைமையிலும் பேரருட்பணி ஜெயபிரகாசம் முன்னிலையிலும் கலை நிகழ்ச்சியோடு விழா தொடங்கியது. ஆரோக்கியசாமி அடிகளார் தம் வாழ்த்துரையில் தானும் சிறு வயது முதல் சேனையராக பணியாற்றியது பற்றியும், அதன் உன்னதமான பணியை பற்றியும், தெளிவாக விளக்கம் தந்து உண்மையான பக்தியில் சேனையார் தொண்டு செய்ய வாழ்த்தினார். ஜெயபிரகாசம் அடிகளார் சேனையின் நோக்கம், அதன் பண்புகளை ஆண்டவர் தாம் கொடுத்த வாக்குறுதியை அபிரகாமுக்கு நிறைவேற்றியது போல அன்னையின் பிள்ளைகளாகிய நமக்கும் செய்து முடிக்க வல்லவர் என்று கூறி ஊக்குவித்தார். கொமித்சிய தலைவி, சேனையார் செபங்களையும், அதன் ஒழுங்கு முறைகளையும் சிறிதும் மாற்றக்கூடாது, மாற்றினால் ஏற்படும் பின்விளைவுகள் பற்றி விளக்கினார். தந்தையர்களின் கூட்டுத்திருப்பலிக்குப் பின் மதிய உணவு வழங்கப்பட்டது.

**இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!**

**சகோதரி இரத்னா மேரி**
**கொமித்சியத் தலைவி**

## COLLEGE SEMINARIANS' RETREAT

**"Vocations are born in prayer and from prayer; and only in prayer can they persevere and bear fruit" – Pope Francis**

The retreat was conducted for the college seminarians and regent on 19 & 20 .08.2022 in the Bishop's House, Vellore after two and half years gap due to COVID – 19 pandemic. The theme of the retreat was **Vocation to the Priesthood: A Supernatural Calling.** This

retreat was mainly inaugurated and presided over by Very Rev. Msgr. I. John Robert, the Diocesan Administrator, Vellore. Three preachers namely Rev. Fr. M. Abraham, Rev. Fr. J. Jayaprakasam and Rev. Fr. A. Chinnasamy preached retreat to the Seminarians.

**The Content of the Theme**

Vocation in general is simply a call from God to a particular state of life. For example marriage is a call from God to form a family, so also other vocations such as doctor, teacher etc. Everyone has a duty to discern and fulfill this vocation. Priesthood is also a vocation, but one infinitely superior to all other vocations because it is supernatural. God wants to bless humanity with his abundant graces and for that He has chosen priests to be special instrument for this task. Without priesthood no sacrament will be celebrated that is vital for the salvation of humanity. That is why priesthood is very significan to be discerned with utmost importance.

**Day 1 (19.08.2022) :** On the first day the brothers were taught and practiced 'Mantra Guided Meditation' to have closer relationship with God during morning prayer and meditation by Rev. Fr. A. Kulandai yesu. Rev.Fr. Chinnasamy in his sharing explained "discerning a vocation is a key step in everyone's life." Rev. Fr. Jayaprakasam connected the theology of creation with God's call based on the Scripture. Rev. Fr. Abraham shared about the inner meaning of priesthood in the day today event of our lives. In the evening, the seminarians had prayerful time to express themselves to God during Holy Hour. After dinner the seminarians recited rosary and went to bed in a very prayerful manner.

**Day 2 (19.08.2022):** On the second day the brothers were taught another guided meditation 'for positive energy, relaxation and inner peace' by Rev. Fr. A. Kulandai yesu. Rev.Fr. Chinnasamy gave talk on "on going formation of the seminarians" with special reference to 1 Timothy 4:14-16; Revelation 21:5. Rev. Fr. Jayaprakasam shared about the call narrative of prophets and their response to God's call. Rev. Fr. Abraham expressed the 'psychological aspect of formation' to the priesthood.

**Holy Mass :** At the end of the second day of retreat, Very Rev. Msgr. I. John Robert the Diocesan Administrator presided over the Thanks Giving Eucharistic Celebration along with very Rev. Fr. Jayaprakasam and Fr. A. Kulandai Yesu. In his sharing Very Rev. Msgr. I. John Robert expressed the real meaning of discipleship in and through Mother Mary. He set Mother Mary as a good icon of discipleship. Through this two days retreat the seminarians experienced God's love and His continued guidance to them to become good priest in the future.

**Rev. Fr. A. Kulandai Yesu**
Diocesan Administrator's Secretary

## பொதுநிலையினர் பணிக்குழு

### வேலூர் மறைமாவட்ட பொதுநிலையினர் கருத்தரங்கு

06.08.2022 அன்று காலை 9 மணிக்கு வேலூர் ஆயர் இல்லத்தில் வேலூர் மறைமாவட்ட பொதுநிலையினர் கருத்தரங்கு வெகுசிறப்பாக நடைபெற்றது. இக்கருத்தரங்கிற்கு மறைமாவட்டத்திலிருந்து 114 பொதுநிலையினர் கலந்து கொண்டு பயன்பெற்றுச் சென்றனர். வேலூர் மறைமாவட்ட பரிபாலகர் **பேரருட்தந்தை முனைவர் I. ஜான் ராபர்ட்** தலைமையிலும் மற்றும் தமிழ்நாடு பொதுநிலையினர் பணிக்குழு செயலர் தந்தை பேரருட்பணி S. லூர்துசாமி, பரிபாலகரின் செயலர் தந்தை அருட்பணி ஆ. குழந்தையேசு, மறைமாவட்ட பொதுநிலையினரின் செயலர் திரு. S. பெலவேந்திரம் அவர்களின் முன்னிலையில் தூய ஆவியாரின் பாடல் பாடப்பட்டும், திருவிவிலியம் வாசிக்கப்பட்டும் சிறு செபத்துடன் கருத்தரங்கு ஆரம்பமானது. நிகழ்வின் தொடக்கமாக சகோ. S. பெலவேந்திரம் அவர்கள் அனைவருக்கும் பொன்னாடை அணிவித்து வரவேற்றார்.

**பேரருட்தந்தை Msgr. I. ஜான் ராபர்ட் அவர்கள் தம் தலைமை உரையில்...**

- ❖ ஆடுகளின் தேவையை அறிந்து ஆயன் செயல்பட வேண்டும்.
- ❖ வேலூர் மறைமாவட்டத்தை தூக்கி பிடித்து காப்பது பொதுநிலையினர் தான்.

- ❖ பொதுநிலையினர் திருஅவையின் செயல்களில் மிகுந்த ஆர்வத்துடன் பங்கெடுக்க வேண்டும்.
- ❖ இன்றைய அன்பிய தலைவர்கள் பணிவிடை புரிகின்ற நோக்கங்களை மறந்துவிட்டு பதவிக்காக தான் செயல்படுகின்றனர்.
- ❖ இறைப்பணியில் குருக்களோடு இணைந்து செயல்பட வேண்டும்.
- ❖ தமிழகத் திருஅவையில் நம் மறைமாவட்டம் தான் பொதுநிலையினர் பணியில் முதன்மையானதாக இருக்க வேண்டும்.
- ❖ நம்முடைய கடமை என்ன? பிள்ளைகளை எப்படி வளர்க்க வேண்டும்? என்று பொதுநிலையினர் புரிந்து கொள்ள வேண்டும்.
- ❖ வேலூர் மறைமாவட்டத்தின் முழுவளர்ச்சி பொதுநிலையினராகிய உங்கள் கையில் தான் உள்ளது.
- ❖ மனிதனாய் பிறப்பது அரிது. மாமனிதனாய் பிறப்பது அதைவிட அரிது. எனவே நமது கத்தோலிக்க திருஅவையில் பொதுநிலையினராகிய நமது வாழ்வின் மைய நோக்கத்தை உணர்ந்து மகத்துவமான இறைப்பணி செய்ய அனைத்து பொதுநிலையினரையும் வாழ்த்தி இறையாசீர் அருளினார்.

**பேரருட்பணி S. லூர்துசாமி "பொதுநிலையினரின் தலைமைத்துவ பயிற்சி" என்ற தலைப்பில் கூறுகையில்...**

- ❖ பொதுநிலையினரின் தலைமை பொற்காலம்.
- ❖ 2000 ஆண்டுகளாக அடிமைப்பட்டு கொண்டிருக்கிறார்கள் பொதுநிலையினர்.
- ❖ பங்குகளில் பொதுநிலையினர் தலைவராக இருக்க வேண்டும்.
- ❖ அடிமட்டத்திலிருக்கும் பொதுநிலையினருக்கு வாய்ப்புகள் தரப்பட வேண்டும்.
- ❖ பொதுநிலையினர் பொறுப்பெடுத்து வழிநடத்தினால் மட்டும் தான் திருஅவையை காப்பாற்ற முடியும்.
- ❖ பொதுநிலையினருக்கு கொடுப்பதற்கு திருநிலையினருக்கு மனமில்லை.

- ❖ மேலும் திருஅவை என்றால் என்ன? பொதுநிலையினரின் திருத்தூது பணி என்ன? தனிப்பட்ட அழைப்பு என்பது யாது? போன்ற வினாக்களுக்கு தெளிவுரை அளித்தார்.
- ❖ பொதுநிலையினர் அரசியலில் முழுக்க முழுக்க இறங்கி செயல்பட வேண்டும்.
- ❖ எங்கும் சென்று இறையாட்சி படைப்பது எல்லாரும் எல்லாம் பெற்று வாழ வேண்டும். சமுதாய மாற்றம் கொண்டு வரவேண்டும்.
- ❖ சாதிய சமுதாயம் அழிக்கப்பட வேண்டும். சாதியம் என்பது ஒரு கட்டுக்கதை, பொய் சமத்துவத்தை அழிக்கக் கூடிய ஒரு நோய் என்று வரலாற்று பிண்ணணியில் மிகவும் ஆணித்தரமாக எடுத்துரைத்தார்.
- ❖ சாதிய மற்றும் சமூக வேற்றுமைகளை களைந்து பொதுநிலையினரின் தலைமைத்துவத்தால் இயேசுவின் வழியில் உண்மைக்கும், விடுதலைக்கும் ஒருங்கிணைந்து பாடுபட வேண்டும்.

**அருட்பணி ஆ. குழந்தையேசு, பரிபாலகரின் செயலர் தமது குழு ஆய்வு ஒருங்கிணைப்பில்...**

**Key Sources :**

- Pope Frances reflects on the role of the laity, "the indispensable role of the lay faithful in the public life of Latin American countries."
- St. John Paul II's 1988 exhortation "*Christifideles laici*."
- ❖ **குருக்களுக்கு திருத்தந்தை பிரான்சிஸ் கூறுவது:** "the clergy should serve lay people and not make use of them" "இறைப்பணியாளர்கள் இறைமக்களுக்கு பணிபுரிபவர்களாக இருக்கவேண்டும் மாறாக இறைமக்களை தங்கள் தேவைகளுக்காக பயன்படுத்தி கொள்பவர்களாக இருக்கக் கூடாது"
- ❖ அனைத்து குருக்களும் மற்றும் துறவறத்தாரும் நாமும் பொதுநிலையினர் என்ற நிலையிலிருந்து தான் நமது இறைப்பணி வாழ்வை தொடங்கியிருக்கின்றோம் என்பதை நினைவு கூர்ந்து, உயரடுக்கு கொண்ட குருத்துவ

அருள்பணியாளர்களாக இல்லாமல், ஆயர்களாக இல்லாமல் பொதுநிலையினரை மையமாக கொண்ட இறைப்பணியாற்ற வேண்டும்.

❖ **பொதுநிலையினருக்கு திருத்தந்தை பிரான்சிஸ் கூறுவது:** "it's time for the laity," (கத்தோலிக்க திருஅவையில் பொது நிலையினருக்கான தலைமைத்துவ நிலைக்கு இதுவே தகுந்த நேரம்) கத்தோலிக்க திருஅவை கொடுக்கின்ற இந்த அருமையான பொது நிலையினரின் தலைமைத்துவத்திற்கான அழைப்பை பொது நிலையினர் சரியான முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

❖ "Pope Francis called for the laity to "take a step forward" in carrying out the Church's mission of evangelization" (இயேசுவின் நற்செய்தி மறைபரப்பு செய்யும் பணியில் பொதுநிலையினர் தானாகவே முன்வர வேண்டும்").

❖ "The co-responsibility of the laity in the building up of the Church," as highlighted in St. John Paul II's 1988 exhortation "*Christifideles laici*." i.e "If the heart of the priest's identity lies in consecrating the Eucharistic bread, the center of the lay mission consists in consecrating the world according to God's plan," Pope Francis wrote. (குருக்கள், அருட்சகோதரிகள் மற்றும் துறவறத்தாரோடு பொதுநிலையினரும் திருஅவை வளர்ப்பதில் இணைந்த பொறுப்பு கொண்டிருக்க வேண்டும். எனவே தான் திருத்தந்தை இவ்வாறு சொல்கின்றார் "திருப்பலியில் சாதாரண அப்பத்தை இயேசுவின் திருவுடலாக அர்ச்சிக்கின்ற அல்லது அர்ப்பணமாக்குகின்ற ஆன்மீகப்பணி குருக்களுக்கு மையப்பணியாக இருப்பது போல, ஆண்டவரின் திருவுளத்திற்கேற்ப இந்த உலகத்தை புனிதபடுத்துகின்ற பணியானது பொதுநிலையினரின் மையப்பணி அல்லது முக்கிய பணியாகும்.

**குழு ஆய்வு அறிக்கை திரு. பெலவேந்திரம் அவர்களிடம் சமர்ப்பித்தல்...**

❖ பொதுநிலையினரின் அதிகாரப்படுத்தும் தலைமைத்துவத்தை 1.குடும்ப அளவில், 2.பங்கு அளவில் மற்றும் மறைமாவட்ட

(வழிபாடு, அன்பியம்), 3.சமூக ரீதியாக (சாதி, பொருளாதார ஏற்றத்தாழ்வு, பண்பாடு & கலாச்சார வேறுபாடுகளை களைந்து), 4.அரசியல் ரீதியாக மற்றும் 5.கல்வி, வேலைவாய்ப்பு மற்றும் பொருளாதார ரீதியாக எப்படி அமைக்கலாம்? போன்ற 5 கேள்விகளையும் 'பொதுநிலையினரை அதிகாரப்படுத்தும் தலைமை உருவாக்குதலின் ஓர் உட்கூறாக மறைவட்ட அளவில் குழுக்களாக பிரித்து, குழு ஆய்வு மேற்கொண்டு பின்பு குழு ஆய்வின் அறிக்கையானது சகோ. பெலவேந்திரம் அவர்களிடம் சமர்ப்பிக்கப்பட்டது.

**செல்வன். ஜெப்ரி இளைஞர் சார்பாக..**

❖ திருச்சபையில் இளைஞர்களின் பங்கு என்ன? அவர்கள் எதிர்கொள்ளும் சவால்கள் என்ன? என்பது பற்றி மிகவும் சிறப்பாக எடுத்துரைத்தார்.

**கலந்து கொண்டவர்களின் பயனுள்ள விமர்சனம் & நன்றியுரை**

❖ ஒரே நாளில் பொதுநிலையினருக்கான தலைமைத்துவ பண்பை பற்றி மிக சிறப்பாக பேரருட்பணி லூர்துசாமி அவர்கள் விளக்கியது மிகவும் பாராட்டுதற்குரியது.

❖ அருட்தந்தை ஆ. குழந்தையேசு பரிபாலகரின் செயலர் அவர்களின் குழு கலந்தாய்வு ஒருங்கிணைப்பு நடைமுறை கூற்றாக அமைந்தது.

❖ இப்படிப்பட்ட பயனுள்ள பொதுநிலையினருக்கான கருத்தரங்கை நமது மறைமாவட்டத்தில் ஏற்பாடு செய்ய ஆசீர் அளித்த **மறைமாவட்ட பரிபாலகர் பேரருட்தந்தை முனைவர் இ. ஜான்ராபர்ட் அவர்களுக்கு** நாங்கள் ஒவ்வொருவரும் நன்றி தெரிவித்து இந்த கருத்தரங்கு 3 மாதத்திற்கு ஒரு முறை அல்ல அவ்வப்பொழுது அமைத்தல் மிகவும் நன்றாக இருக்கும் என்ற சிறப்பான விமர்சனங்களை பங்கேற்ற பொதுநிலையினர் தங்கள் உள்ளத்தின் ஆழத்திலிருந்து வெளிப்படுத்தினார்கள்.

❖ பொதுநிலையினரின் தலைமைத்துவ பண்பிற்கு திரு. பெலவேந்திரம் அவர்களே ஓர் சிறந்த முன்மாதிரியாக

திகழ்கின்றார். இப்படிபட்ட பல தலைமைத்துவ பண்பில் வளர்ந்து, மறைமாவட்டத்தையும், திருச்சபையையும் வளர்ச்சி பாதை நோக்கி செயல்படுத்துபவர்களை இனம்கண்டுகொண்டு அவர்களை ஊக்கப்டுத்தி, ஆக்கப்பூர்வமாக பயன்டுத்த வேண்டுமென்றும் அறிவுறுத்தப்பட்டது.

❖ இறுதியாக ஒரு சிறிய நன்றி உரையுடன் கருத்தரங்கு இனிதே நிறைவுற்றது.

**மறைகோட்ட அளவில் பங்கேற்பு விவரம்**

அரக்கோணம் - 12, சேத்பட் - 11, போளூர் - 04, திருப்பத்தூர் - 10, திருவண்ணாமலை - 06,வந்தவாசி - 05, வேலூர் - 52, வேட்டவலம் - 04, **மொத்தம் - 114** நபர்கள் பங்கேற்றனர். பொதுநிலையினரை கருத்தரங்கில் பங்கெடுக்க ஊக்குவித்த அனைத்து மறைகோட்ட முதன்மை தந்தையர்களுக்கும், பங்குத் தந்தையர்களுக்கும் எமது நன்றிகளும், வாழ்த்துகளும். தொடர்ந்து திருத்தந்தை ஆசீர் மற்றும் நமது மறைமாவட்ட பரிபாலகர் தந்தையின் ஆவலுக்கினங்க திருச்சபையில் பொதுநிலையினர் தலைமைத்துவம் சிறந்திட பொதுநிலையினர் இப்படிப்பட்ட பயனுள்ள கருத்தரங்கில் பங்கேற்க உற்சாகப்படுத்தி அனுப்பி வைக்குமாறு உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறோம்.

**S. பெலவேந்திரம்**
**செயலர்**
**பொதுநிலையினர் பணிக்குழு, வேலூர்**

## "We Demand SC/ST Status"
## கருப்பு நாள்
## மாபெரும் கருப்பு நாள் கண்டனப் பேரணி & பொதுக்கூட்டம்

**கருப்பு நாள் என்றால் என்ன?** ஆண்டுதோறும் ஆகஸ்டு 10 ஆம் நாள் கருப்பு தினமாக அறிவிக்கப்பட்டு, தலித் கிறிஸ்தவர்களுக்கு பட்டியல் வகுப்பினர் உரிமைகளை மத்திய அரசு வழங்க தேசிய

அளவில் போராட்டங்கள் நடத்தப்படுகிறது. பல்லாண்டு காலம் இந்தியக் கிறித்தவர் என்ற பிரிவில் தொடர்ந்து ஒதுக்கீட்டு உரிமைகளை பெற்று வந்தனர். 1950 ஆம் ஆண்டு, இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் 15/4 சாதியின் பெயரால் அனைத்து பட்டியல் சாதியினருக்கும் அளிக்கப்பட்ட ஒதுக்கீட்டு உரிமைகளை சமயத்தின் பெயரால், தலித் கிறித்தவர்களுக்கு மறுக்கும் 1950 ஜனாதிபதி ஆணையில், ஜனாதிபதி கையெழுத்திட்ட ஆகஸ்ட் 10–ஆம் நாள் கருப்பு தினமாகும். இவ்வாண்டும் இக்கோரிக்கையை வலியுறுத்தி போராட்டம் நடந்தது.

**13.08.2022** அன்று காலை சேத்துப்பட்டில், வேலூர் மறைமாவட்ட அளவில் தலித் கிறிஸ்துவர்களை எஸ்சி, எஸ்டி, பட்டியலில் சேர்க்க வலியுறுத்தியும் ஆகஸ்டு 10-ம் நாள் இந்திய நாட்டில் உள்ள தலித் கிறிஸ்தவர்களை மத அடிப்படையில் வேற்றுமை காட்டும் குடியரசு தலைவர் ஆணை 1950 பத்தி3ஐ நீக்கி எஸ்சி பட்டியலில் சேர்க்க மத்திய அரசை வலியுறுத்தி கருப்பு நாள் கண்டன பேரணி மற்றும் பொதுக்கூட்டம் பேரருட்தந்தை முனைவர் ஐ. ஜான் ராபர்ட், வேலூர் மறைமாவட்ட பரிபாலகர் அவர்களின் தலைமையில் வெகு புரட்சியாக நடைபெற்றது.

சேத்துப்பட்டு தூய லூர்து அன்னை திருத்தலத்திலிருந்து நூற்றுக்கணக்கான தலித் கிறித்தவர்கள், அருட்தந்தையர்கள், அருட்கன்னியர்கள், தலித் அமைப்புகள், மற்றும் இஸ்லாமியர்கள் கையில் பதாகைகளுடன், கருப்பு பேட்ச் அணிந்து கையில் கொடியுடன் கண்டன முழுக்கங்களை எழுப்பிக் கொண்டு போளூர் சாலை வழியாக வந்தவாசி சாலை காமராஜர் சிலை அருகில் அமைக்கப்பட்டிருந்த பொதுக்கூட்ட திடலை அடைந்தனர். இதில் குறிப்பாக **ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமைக்காக போராடும் ஓர் உயர்ந்த ஆயனாக பேரருட்தந்தை முனைவர் இ. ஜான் ராபர்ட், வேலூர் மறைமாவட்ட பரிபாலகர் அவர்கள்** கலந்து கொண்டு, விளிம்புநிலை மக்களுக்காக, சுடும் வெயிலிலும் வீதியில் இறங்கி மக்களோடு மக்களாக, சேத்துப்பட்டு தூய லூர்து அன்னை திருத்தலத்திலிருந்து பேரணியை தொடங்கி, போளூர் சாலை, வந்தவாசி சாலை வழியாக பொதுக்கூட்டம் நடைபெற்ற இடம் வரை உரிமைக்குரல் எழுப்பி பயணித்தார். பொதுக்கூட்டத்தில் அவர் எழுப்பிய வீர, விடுதலை எழுச்சி உரையாற்றுகையில்...

- ஏன் கருப்பு தினம்? என வினா எழுப்பி, கருப்பு தினம் என்றால் துக்க நாள். ஒருவர் இறந்துவிட்டால் அந்த நாள் நமக்கு துக்க நாளாக அமைகின்றது. காரணம் அவரின் இழப்பு. இதயம் வலிக்கிறது, கண்கள் கண்ணீரால் நனைகின்றன. அதுபோல தான் மதம் மாறிய தலித் கிறிஸ்தவ மக்களுக்கு இது ஒரு துக்க நாள். காரணம் அவர்களின் உரிமைகள் இழந்த நாள்.

- சமயம் என்பது மனிதனை பக்குவப்படுத்தி மனித நேயத்தையும், இறைநேயத்தையும் வளர்க்க கூடியதொன்றாகும். ஆனால் இன்று சமயத்தின் பெயராலும், சாதியத்தின் பெயராலும், தலித் கிறிஸ்துவர்களை ஒடுக்குகின்றார்கள், நசுக்குகின்றார்கள்.

- இத்தகைய ஒடுக்குதல் மனித நேயத்திற்கு எதிரான ஒரு குற்ற செயல். அத்தகைய அழிவு சக்திகளை நாம் இனம்கண்டுகொண்டு அவற்றிற்கு எதிராக போராட வேண்டும்.

- தலித் கிறிஸ்தவ மக்களுக்கு மட்டும் அல்லாமல் இந்த சமூகத்தில் ஒடுக்கப்பட்டுக்கொண்டிருக்கின்ற எல்லா மக்களுக்காகவும் நாம் ஒன்று திரண்டு போராட வேண்டும்.

- சாதியம் என்பது வந்தேரியர்களாகிய, ஆரியர்கள் நம்மீது திணித்த ஓர் சாயம். வாராணாசியில் "தத்துவம் சமயம்" என்ற ஆராய்ச்சியில் முதுகலைப்பட்டம் பெற்று ஆய்ந்து படிக்கும்பொழுது, உலகலாவிய சமயங்களைப் பற்றியும், உலகலாவிய தத்துவங்களைப் பற்றியும் படித்தபோது அதில் எந்த சமயமோ, தத்துவமோ மனித நேயத்திற்கு எதிரான மனித மாண்பை குலைக்கின்ற, சிதைக்கின்ற எந்த கருத்தையும் சொல்லவில்லை. சமயம் என்பது மனிதனை சமைத்து பக்குவ படுத்துவதொன்றாகும். அவை அன்பையும், நீதியையும், உண்மையையும், சகோதரத்துவத்தையும், சமத்துவத்தையும் தான் அறிவுறுத்துகிறது.

- சமயத்தை வைத்து நம்மையெல்லாம் முட்டாளாக்கி கொண்டிருக்கிறார்கள். இது மனித குலத்திற்கே ஓர் இழுக்கு. இத்தகைய முட்டாள்தனத்தையும், அடிமைத்தனத்தையும் வேரறுக்க நாம் அனைவரும் ஒன்று சேர்ந்து ஒற்றுமையாக போராடுவோம், உரிமைக்காக குரல் கொடுப்போம். என்று தமது விடுதலை மற்றும் வீர உரையில் பதிவு செய்தார்.

இந்த சமஉரிமை போராட்டத்தில் Dr. I. ஐசக் கதிர்வேலு, CSI திருச்சபை, வேலூர், சேத்துப்பட்டு பேரூராட்சி மன்ற தலைவர் சுதா முருகன், துணைத் தலைவர் திலகவதி செல்வராஜன், விடுதலை சிறுத்தைகள் கட்சி மாவட்ட செயலாளர் பகலவன் (எ) பாஸ்கரன், ஆகியோர் கண்டன உரையாற்றினர். நகர அதிமுக செயலாளர் ராதாகிருஷ்ணன், காங்கிரஸ் பொதுக் குழு உறுப்பினர் முனிரத்தினம், உட்பட பலமுக்கிய அரசியல் பிரமுகர்கள் இந்தக் கண்டனப் பேரணியிலும், பொதுக்கூட்டத்திலும் கலந்துகொண்டனர். இவர்களோடு இக்கண்டன ஆர்ப்பாட்டத்தில், சேத்துப்பட்டு லூர்து நகர், நிர்மலா நகர், தேவிகாபுரம், பத்தியாவரம், முடையூர், தச்சாம்பாடி, நரசிங்கபுரம், கெங்காபுரம், வந்தவாசி, போளுர், ஆரணி, வேலூர், ராணிப்பேட்டை, அரக்கோணம், திருவண்ணாமலை உள்பட பல்வேறு பகுதியிலிருந்து திரளான தலித் கிறிஸ்துவர்கள் கலந்து கொண்டனர்.

### எழுச்சிமிகு புரட்சிப்பாடல்..

புரட்சி நோக்கிய பூகம்பமாக விடுதலைப்பாடலும், வீரப்பாடலும், சமூக நீதி பாடலும் எழுச்சியுரைக்கு இடையில் பாடப்பட்டன. குறிப்பாக அருட்பணி. சத்தீஷ் அவர்கள் "சிங்கத்தை அதன் குகையில் சந்திப்பது வீரமடா? அம்பேத்கர் சந்தித்தவிதம் கேளுங்கடா?" என்ற அண்ணல் அம்பேத்காரின் எழுச்சிமிகு பாடலை, இளம் சிறுத்தையாக, சிங்கமாக விடுதலை முழக்கத்தை தம் கம்பீர குரலால் பாடி அனைவரின் இரத்தத்தோடு கலந்த உரிமைக்கு கிளர்ச்சி உண்டாக்கினார்.

நிகழ்ச்சியின் தொகுப்பை அருட்பணி P. ஞானசேகர் அவர்கள் ஆழ்ந்த கருத்து நடையோடு, மிகவும் செம்மையாக ஏற்படுத்திகொடுத்தார். மேலும் இந்த பேரணி மற்றும் பொதுக்கூட்டம் சிறப்பாக நடைபெற உதவிய அனைத்து போராளிகளையும், குறிப்பாக முழு வீச்சோடு பணியில் ஈடுபட்ட முன்னாள் இளையோர் மற்றும் தலித் பணிக்குழு செயலாளர் அருட்பணி P. ஞானசேகர்மற்றும் உடன் ஒத்துழைப்பு வழங்கிய அருட்பணயாளர்கள் லியோ மரிய ஜோசப், சத்தீஷ் மற்றும் ஆனந்த் அவர்களுக்கும், மேலும் இதில் கலந்து கொண்ட அருட்பணியாளர்களுக்கும், அருட்சகோதரிகளுக்கும், பங்கு மக்களை அனுப்பிய பங்குதந்தையர்களுக்கும், இதில் கலந்து கொண்ட மற்ற இறைமக்களுக்கும் சிறப்பாக சேத்துப்பட்டில் நடத்த அனுமதியும், முழு ஒத்துழைப்பும் வழங்கிய சேத்துப்பட்டு திருத்தல அதிபர் பேரருட்பணி

N. விக்டர் இன்பராஜ் அவர்களுக்கும், உதவி பங்குதந்தையர்கள் அவர்களுக்கும், ஊடகத் துறையைச் சார்ந்த அருட்பணி சுதர்சன் மற்றும் மாதா தொலைக்காட்சி குழுமத்திற்கும், திரு பிரேம் ஊடகத்துறை நண்பர்கள் மற்றும் காவல்துறை அதிகாரிகளுக்கும் இளையோர் மற்றும் தலித் பணிக்குழு செயலாளர் அருட்பணி தொல். லாரன்ஸ் அவர்கள் சார்பாக எஸ்.சி, எஸ்.டி பணிக்குழு மாநில துணைச்செயலாளர் அனிதா அவர்கள் நன்றி கூறிட கருப்புநாள் கண்டனப் பேரணி & பொதுக்கூட்டம் வீர முழுக்கத்துடன் முடிவுற்றது, புது விடியலை நோக்கி...

**ஊடகம் மற்றும் செய்தியாளர்களுக்கு மறைமாவட்ட பரிபாலகர் பேரருட்தந்தை முனைவர் இ. ஜான் ராபர்ட் அவர்கள் கொடுத்த உரிமைக்கான கோரிக்கைகள்:**

1. மத்திய அரசு மே 2007 ஆம் ஆண்டு முதல் 14 ஆண்டுகளாக கிடப்பில் போடப்பட்டிருக்கும் ரங்கநாத் மிஸ்ரா கமிஷன் பரிந்துரையான ஜனாதிபதி ஆணை 1950, பத்தி 3 முழுவதையும் நீக்கி SC பட்டியலில் சேர்க்க பாராளுமன்றத்தில் சட்டம் நிறைவேற்ற வேண்டும்.
2. 2004 முதல் 17 ஆண்டுகளாக உச்சநீதிமன்றத்தில் நிலுவையிலுள்ள வழக்கு (WP 180-2004) விசாரணைக்கு பா.ஜ.க அரசு உடனே பதில் தரவேண்டும். நீதித்துறை தலித் கிறித்தவர்களுக்கு சமூக நீதி வழங்க வேண்டும்.
3. தமிழக அரசு சட்டப் பேரவையில் தலித் கிறித்தவர்களுக்கு பட்டியலினத்தார் உரிமைகளை வழங்கிட தீர்மானம் நிறைவேற்றி, ஒன்றிய அரசுக்கு அனுப்ப வேண்டும். மேலும், தி.மு.க பாராளுமன்ற உறுப்பினர்கள் இத்தீர்மானம் நிறைவேற பாராளுமன்றத்தில் வலியுறுத்த வேண்டும்.
4. தமிழகத்தில் ஆதிதிராவிடர் பெறுகின்ற கல்வி மற்றும் பொருளாதார சலுகைகளை மதம்மாறிய கிறித்தவ ஆதிதிராவிட மக்களும் பெறுவதற்கு ஆவன செய்தல் வேண்டும்.

**அருட்பணி தொல். லாரன்ஸ்**
செயலர்
மறைமாவட்ட இளையோர் மற்றும் தலித் பணிக்குழு, வேலூர்

## National Minorities Scholarship – 2022-2023

தேசிய சிறுபான்மையினர் கல்வி உதவித் தொகை

மத்திய அரசு மாணவ மாணவிகளுக்கு கல்வி உதவித் தொகை வழங்குவதற்காக ஒரே அமைப்பை உருவாக்கி இருக்கிறது. அமைப்பின் பெயர் **National scholarship Portal.** மாநிலங்கள் கல்வி உதவித்தொகை வழங்குவது இல்லை. மத்திய அரசு அளிக்கும் கல்வி **உதவித்தொகை பெறுவதற்கு Online வழியாக ஆங்கிலத்தில் விண்ணப்பங்கள் பூர்த்தி செய்து அனுப்பப்பட வேண்டும்.**

### I. Eligibility (தகுதியுடையோர்)

Minority Communities Christian, Muslims, Buddhist, Jain, and Sikh

### II. Types of Scholarship/Scholarship Amount (கல்வி உதவித்தொகை)

**1. Pre Metric :** 1st To Vth Std – Rs. 1000 per annum; VI to Xth Std - Rs.5000 per annum; Annual Income Limit – Rs 1 lakh; 50% marks in previous class

**2. Post Metric :** 11 & 12 Std – Rs. 6000 per annum; Graduate Rs. 6000 to 12000 per annum; Annual Income Limit – Rs. 2 lakh; 50% Marks in previous class

**3. Metric Cum Means:** Professional & Technical Course; Rs.25,000 / 30,000 per annum; Annual Income Limit – 2.5 lakh; 50% Marks in previous class.

**Note: www.scholarhsips.gov.in**

## III. To keep the following documents handy for Registration (ஆவணங்கள்)

1. Educational documents of student / Mark Sheet
2. Student's Bank account number and IFSC code of the bank branch

**Note:** For pre metric scholarship scheme, where students do not have their own bank account, parents can provide their own account details.

3. Aadhaar Enrolment ID or Scanned copy of Bank passbook
4. Family Annual Income Certificate by competent authority.
5. Domicile / Residential Certificate
6. Minority Community Certificate
7. Fee Receipt of Current Course
8. Address of Student and Educational Institution

### IV. Application : Online for fresh / Renewal

LAST DATE FOR APPLICATION :

| | | |
|---|---|---|
| Premetric Scholarship | : | 30.09.2022 |
| Post metric Scholarship | : | 31.10.2022 |
| Professional / Technical Course | : | 31.10.2022 |

### V. Instructions for filling up the online Application Form in National Scholarship Portal (விண்ணப்பபடிவத்தில் பூர்த்தி செய்யும் வழிமுறைகள்)

1. **Date of Birth:** Provide DOB as printed in educational certificates
2. **State of Domicile:** Domicile state means the state in which students have their permanent address.
3. **Scholarship Category:**

a. Pre-Metric Scholarship Scheme : Ist to Vth

b. Post Metric Scholarship scheme : 11th to College Arts / Science Course

c. Merit Cum Means Scholarship : Professional and Technical Course

4. **Name of the Student:**

Provide name as printed in educational certificates

For students providing Aadhaar number to ensure that your name is correct in your Aadhaar card.

5. **Mobile Number:** Provide correct and authenticated mobile number, as all the communications and One-time passwords related to portal activities will be sent as SMS on this mobile number.

6. **Email Id.** Provide correct and authenticated email id, as all the communications and One-time passwords related to portal activities will be sent on this email Id.

7. **Bank Account Details: First page of Bank pass Book**

Provide active bank account number and IFSC code of the bank branch of the student.

8. **Identification Details: (**Aadhaar Number) Students who have Aadhaar number are required to provide 12-digit Aadhaar number as printed on Aadhaar card.

## VI. Important Note : (கவனிக்க வேண்டியவை)

1. Student should verify the application before **SUBMITTING**
2. After submitting the application, the default login id and password to log into NSP portal will be sent to the provided mobile number.
3. If possible submit the hard copy of the application at the institution and District nodal officer.

4. After submitting application keep safely the permanent id and date of Birth to check the status of the application.

5. The message of grant will be forwarded to your phone / mobile number, you may check with Bank about the receipt of the scholarship grant.

We request all the people including Heads of the Education Institutions, Parish Priests to help the students for getting Minority Scholarship.

அருள்பணி. S. லூர்துசாமி
செயலர்
தமிழ்நாடு பொதுநிலையினர் பணிக்குழு

**Birthday**

| | | |
|---|---|---|
| 1 | Fr. A. Jonas Philomina Doss | 01-09-1979 |
| 2 | Fr. S. ose Enchackal | 03-09-1951 |
| 3 | Fr. N. Arockia Doss | 06-09-1970 |
| 4 | Fr. K. A.Rayappa | 08-09-1954 |
| 5 | Fr. A. Bernard Velanganni | 08-09-1972 |
| 6 | Fr. R. James Vincent | 10-09-1957 |
| 7 | Fr. A. Yesu Durai | 15-09-1984 |
| 8 | Fr. M. Martin | 19-09-1958 |
| 9 | Fr. S. Sagayanathan | 19-09-1973 |
| 10 | Fr. M.Thangaraj | 19-09-1974 |
| 11 | Fr. G. Mathias | 20-09-1940 |
| 12 | Fr. M. A. Arockia Raj | 20-09-1973 |
| 13 | Fr. A. Lazar Velankanni | 23-09-1981 |
| 14 | Fr. Y. Anthony Raj | 25-09-1953 |
| 15 | Fr. A. Roy Lazar | 28-09-1959 |
| 16 | Fr. V. Kuriakose Kariakatt | 30-09-1951 |

**Ordination Day**

| | | |
|---|---|---|
| 1 | Fr. A.Arulsamy | 11-09-1977 |

**Intention : The Abolition of the Death Penalty**

We pray that the death penalty, which attacks the dignity of the human person, may be legally abolished in every country.

\- **Pope Francis**

**Calendar**

| | | |
|---|---|---|
| 3 | Sat | St. Gregory the Great, Pope and Dr, Mem |
| 4 | Sun | 23rd Sunday of Ordinary Time |
| 5 | Mon | St. Teresa of Kolkata Vgn, Mem |
| 8 | Thu | The Nativity of the Blessed Virgin Mary, Feast |
| 11 | Sun | 24th Sunday of Ordinary Time |
| 13 | Tue | St. John Chrysostom, Bp and Dr, Mem |
| 14 | Wed | The Exaltation of the Holy Cross, Feast |
| 15 | Thu | The Blessed Virgin Mary of Sorrows, Mem |
| 16 | Fri | Saints Cornelius and Cyprian, Bp and Mtrs, Mem |
| 18 | Sun | 25th Sunday of Ordinary Time |
| 20 | Tue | Saints Andrew Kim Taegon, Paul Chong Hasang and Co. Mtrs, Mem |
| 21 | Wed | St. Matthew, Apostle and Evangelist, Feast |
| 23 | Fri | St. Pio of Pietrelcina, Priest, Mem |
| 25 | Sun | 26th Sunday of Ordinary Time |
| 27 | Tue | St. Vincent De Paul, Priest, Mem |
| 29 | Thu | Saints Michael, Gabriel and Raphael, Archangels, Feast |
| 30 | Fri | St. Jerome, Priest and Dr, Mem |

**Necrology**

| | | |
|---|---|---|
| 1 | Rev. Fr. Immanuel Alves SDB | 07.09.1976 |
| 2 | Rev. Fr. Fioro de Beneditto SDB | 11.09.1978 |

| | | |
|---|---|---|
| 3 | Rev. Fr. M. Rayappa | 11.09.2020 |
| 4 | Rev. Fr. Michael Cusini SDB | 17.09.1976 |
| 5 | Rev. Fr. Lazar SDB | 18.09.1997 |
| 6 | Rev. Fr. C. Kurivilla | 19.09.2001 |
| 7 | Rev.Fr. A.Joseph | 21.09.2014 |
| 8 | Rev. Fr. Peter Meligo | 23.09.1958 |

**RIP**

In your charity kindly pray for the repose of the soul of Rev. Fr. P. P. George SDB (88), who passed away on 13.08.2022. He was principal of Sacred Heart College for many years and did commendable service to the Diocese of Vellore in the field of education. May his soul rest in peace!



# பொன்விழா ஆண்டின் 1972–2022
## கொண்டாட்ட திருநிகழ்வுகள்
### தூய உலகமாதா ஆலயம் – திருவண்ணாமலை

"விண்ணகத்தின் மகிமை மண்ணகத்தின் பெருமை – மரியா"











பொன்விழா ஆண்டு நினைவாக தூய லூர்து அன்னையின் புதிய கெபி







